DINAKARAN

27 AUG 2022

PAGE 14

# குடியரசு தலைவருக்கு புதுவை பல்கலை துணைவேந்தர் வாழ்த்து



குடியரசு தலைவர் திரவுபதி முர்முவை புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மித்சிங் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். அருகில் அவரது மனைவி குர்மீத்கவுர்.

புதுச்சேரி, ஆக. 27: இந்திய நாட்டின் 15வது குடியரசு தலைவராக திரவுபதி முர்மு கடந்த மாதம் 25ம் தேதி பதவியேற்றார். இந்நிலையில் புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரும், காந்தி கிராம் கிராமப்புற நிறுவனம் மற்றும் திண்டுக்கல் நிகர்நிலை பல்கலைக்கழக துணை வேந்தருமான பேராசிரியர் குர்மீத்சிங் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை நேற்று முன்தினம் ராஷ்டிரபதி பவனில் மரியாதைநிமித்தமாக சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். அப்போது துணைவேந்தர் குர்மீத்சிங்கின் மனைவி டாக்டர் குர்மீத்கவுர் உடனிருந்தார்.